மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 17/2022 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சுப்பிரமணி | நாள் | 03.10.2023 |
| தகப்பனார் பெயர் | பழனியப்ப கவுண்டர் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

9) பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் அல்ல. தாவா சொத்தை என் தாயாருக்கு யார் கிரயம் கொடுத்தனர் என்றால், சித்தையன் என்பவர் கிரயம் கொடுத்தார். மேற்படி சொத்து சித்தையனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்காக மேற்படி சித்தையனின் உரிமை மூல ஆவணம் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

10) மேற்படி சித்தையனின் பெயரிலுள்ள உரிமை மூல ஆவணம் எந்த வருடத்திய பத்திரம் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. அதேபோல் நீதிமன்றத்தில் சித்தையனின் உரிமை மூல ஆவணமாக எந்த பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

11) தாவா சொத்தை என் தாயார் பெயரில் கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் எதையேனும் பெற்று பரிசீலித்து பார்த்தோமா என்றால், இல்லை. மேற்படி சித்தையன் பெயரில் பட்டாவோ, அடங்கலோ உள்ளதா என்றால், இல்லை. என் தாயார் பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் மேற்படி சித்தையனுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளோமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

12) என் தாயார் பெயரிலுள்ள கிரய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. என் தாயார் பெயரில் கிரய ஆவணம் ஏற்படுத்திய பத்திர எழுத்தர் யார் என எனக்கு தெரியுமா என்றால், தாரமங்கலத்தில் எழுதப்பட்டது. ஆனால் பத்திர எழுத்தர் பெயர் தெரியாது.

13) மேற்படி கிரய ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்திட்டுள்ளனர் என்றால், மாதேஸ் இட்டுள்ளார். வேறு யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளனர் எனக்கு தெரியாது. மேற்படி கிரயத்திற்கு எவ்வளவு ரூபாய்க்கு முத்திரை தாள் பெறப்பட்டத என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், ரூ.11,700/–க்கு பத்திரம் வாங்கினார்கள். மேற்படி பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால், என் தாயார் பெருமாயி பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால், என்னிடம் உள்ளது.

14) அசல் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அசல் ஆவணத்தை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மேற்படி கிரய பத்திரத்தின் பதிவு நகலைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

15) மேற்படி கிரய ஆவணத்தில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி சொத்துக்களில் என்னென்ன அமைப்புகள் உள்ளது என மேற்படி கிரய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

16) மேற்படி கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு என் தாயாரின் முன் விற்பனையாளரான சித்தையன் பெயரில் என்ன பட்டா இருந்தது என்றோ, தற்போது என் தாயார் பெயரில் என்ன பட்டா உள்ளது என்றோ எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

17) தாவா சொத்திற்கு எந்தெந்த வருடங்களில் கந்தாய ரசீதுகள் செலுத்தியுள்ளோம் என்றால், எந்தெந்த வருடங்கள் என குறிப்பாக நினைவில்லை. ஆனால் சுமார் 15 வருடங்களாக செலுத்தி வருகிறோம். மேற்படி 15 வருடங்களுக்குரிய ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. இவ்வழக்கில் இறுதியாக

2021ம் வருடத்தில் கந்தாய ரசீது செலுத்திய ரசீதை தான் பெருமாயி வகையறா என்ற பெயரில் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான்.

18) தாவா சொத்திற்குரிய மின் கட்டண ரசீது 4–ம் வாதி சேட்டு என்பவரது பெயரில் உள்ளதாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி மின் இணைப்பு எண்ணை என் வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிடவில்லை என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. அதேபோல் வழக்குரை சொத்து விவரத்தில் தாவா சொத்திலுள்ள வீடு குறித்தோ, அதன் கதவு எண் குறித்தோ சொல்லவில்லை என்றால், சரிதான்.

19) நான் சொல்வது போல் தாவா சொத்தில் வீடோ, மின் இணைப்போ எதுவும் இல்லாததால் தான் அதுகுறித்து வழக்குரை சொத்து விவரத்தில் நான் சொல்லவில்லை என்றாலும், என் வழக்குரையில் சொல்லாத சங்கதிகள் குறித்து நான் தாக்கல் செய்துள்ள ஆவண சாட்சியங்கள் ஏற்கதக்கதல்ல என்றாலும், சரியல்ல.

20) தாவா சொத்தானது ஆதியில் பழனி கவுண்டர் மற்றும் முத்து கவுண்டர் என்பவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால், அதுகுறித்து எனக்கு தெரியவில்லை. என் தாயாருக்கு தாவா சொத்தை விற்பனை செய்த முன் விற்பனையாளர் சித்தையனின் உடன் பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. 2–ம் பிரதிவாதி மாதேஸ் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால், அதுகுறித்து குறித்து எனக்கு தெரியாது.

21) மேற்படி மாதேஸ் உடன் பிறந்த சகோதரர் வேலு என்பவர் மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் தாவா சொத்து உட்பட இதர சொத்துக்கள் மீது பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்திற்கும், மேற்படி வேலுவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சார்பு நீதிமன்றத்திலுள்ள வழக்கையும், இந்த வழக்கையும் ஒன்றாக விசாரிக்க வேண்டும் என நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், இல்லை.

22) தாவா சொத்தை அளக்க வந்த போது யார் தடுத்தனர் என்றால், வேலுவும், மாதேசும் தடுத்தனர். அவ்வாறு இருவரும் தடுத்ததாக சொல்லும் நிலையில், மேற்படி வேலுவை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். மேற்படி இருவர் மீதும் நான் காவல் நிலையத்தில் அளித்த புகார் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

23) நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு தொடர்பற்றது என்றாலும், அதில் வேறொரு சொத்தை காண்பிக்கப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல.

24) பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் தாவா சொத்தை மறு பயன் பெற்று எனக்கு விற்பனை செய்யவில்லை என்றால், சரிதான். ஆனால், அவர்கள் தான் எங்களுக்கு சொத்தை விற்றார்கள். அவ்வாறு பிரதிவாதிகள் தாவா சொத்தின் பேரிலுள்ள எங்களது உரிமையை மறுக்கும் நிலையில் நாங்கள் விளம்புகை பரிகாரம் எதுவும் இவ்வழக்கில் கோரவில்லை என்றால், சரிதான்.

25) தாவா சொத்து எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்குள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது என நான் சொல்லியுள்ள நிலையில், எந்த தேதியில் எவ்வளவு விஸ்தீரணத்தில் பாகங்கள் பிரிக்கப்பட்டது என நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். எந்த தேதியில் என்றால், 2015ம் வருடம் பிரித்துக்கொண்டோம். மேற்படி சங்கதிகளை என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான்.

26) தாவா சொத்து மாதேஸ் எங்களிடம் பெற்ற கடனுக்கு ஆதாரமாக பெறப்பட்டது என்றாலும், ஒருபோதும் தாவா சொத்தின் சுவாதீனம் எங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. நாங்கள் ஒருபோதும் மாதேசிற்கு கடன் கொடுத்ததே இல்லை.

27) தாவா சொத்தின் பெயரிலுள்ள கிரய ஆவணம் கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு

நடவடிக்கை என்பதால்தான் தாவா சொத்தின் அனுபவம் குறித்தோ, அதன் அமைப்பு குறித்தோ, மேற்படி கிரய ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்தோ எனக்கு எவ்வித சங்கதிகளும் தெரியவில்லை என்றால், சரியல்ல. நான் சட்ட நடைமுறைகளை தவறாக பயன்படுத்தி வழக்கை தாக்கல் செய்து துர்லாபம் அடைய முயற்சித்ததால் என் வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.